

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் உயர்கல்வித் துறையின் சார்பில் கட்டப்பட்டுள்ள ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடங்களை திறந்து வைத்ததை தொடர்ந்து, போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் பங்கேற்று பார்வையிட்டார்.

### தருமபுரி மாவட்டத்தின் மேல் தனி கவனம் வைத்து

# தொலைநோக்கு திட்டங்களை வழங்கியுள்ளார் முதல்வர்!

## வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. பேச்சு!



*தருமபுரி நவ 23:*

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் தொழில் மையம் சார்பில் நடைபெற்ற தொழில் மற்றும் புத்தொழில் கண்காட்சி தமிழ்நாடு சிப்காட் மேலாண்மை இயக்குநர் கி.செந்தில் ராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ்,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி ஆகியோர் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த புத்தொழில் கண்காட்சியினை துவக்கி வைத்து தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் திமுக கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர். ஆ.மணி பேசுகையில் :

சிப்காட்டில் இட ஒதுக்கீட்டில் 15% குறு சிறுதொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் சிட்கோவிற்கு வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அனுமதி அளித்துள்ளார்.இதனால் சிறு தொழில் முனைவோரும் பயன் பெறுவர்.அதே போல் தமிழ்நாட்டில் கும்மிப்பூண்டியை அடுத்து தருமபுரி சிப்காட்டிற்கு மட்டுமே சுற்று சுழல் மற்றும் வனங்கள் அமைச்சகத்திடமிருந்து (Ministry of environment and Forest Clearance) அனுமதி பெறப்பட்டுள்ளதால் மின்சார வாகனத்திற்கு தேவையான பேட்டரி உற்பத்தி நிறுவனங்கள் தொடங்கவும் தருமபுரி மாவட்ட மக்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது,

என்றும் தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சிக்கு பாடுபட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகதலைவர் அவர்கள் தருமபுரி மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்தும் வகையில் எத்தனயோ தடைகள் வந்த போதிலும் அவற்றை கடந்து தற்போது சுமார் 2500 ஏக்கர் பரப்பளவில் தருமபுரி சிப்காட்டினை உருவாக்கி அதனை வெகு விரைவில் மக்களின் பயன்பாட்டிற்கு வழங்க உள்ளார்.

கடந்த மாதம் தருமபுரி மாவட்டத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் வருகை தந்த போதும் சிப்காட் பணிகள்,மற்றும் புதிய பேருந்து நிலைய பணிகளை நேரில் ஆய்வு செய்து அப்பணிகளை விரைந்து முடிக்க ஆணையிட்டுள்ளார்.எனவே தருமபுரி மாவட்ட மக்கள் சிறு,குறு,மற்றும் பெரு தொழில் செய்வோர்,தொழில் முனைவோர் என அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் தருமபுரி மாவட்டத்தின் மேல் தனி கவனம் வைத்து பல தொலைநோக்கு திட்டங்களை இந்த மாவட்டத்திற்கு வழங்கி வருகிறார், உதாரணமாக மாவட்ட தொழில் மையத்தின் மூலமாக படித்த மற்றும் படிக்காத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கிடும் வகையில் அண்ணல் அம்பேத்கார் தொழில் முன்னோடிகள் திட்டம்,கலைஞர் கைவினைத் திட்டம் (KKT), வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) உள்ளிட்ட திட்டங்களின் வாயிலாக மானியத்துடன் கடனுதவி வழங்கியதன் காரணமாக ஏராளமானோர் இன்று தொழில் துவங்கி வேலைவாய்ப்புகளை உருவாக்கி பயனடைந்து வருகின்றனர். எனவே நிச்சயமாக தருமபுரி மாவட்டம் வருங்காலத்தில் தமிழ்நாட்டில் ஒரு தொழில் நகரமாக உருவெடுக்கும் என்று அவர் தெரிவித்தார்.

இக்கண்காட்சியில் பல்வேறு தொழில் நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலைகளின் உற்பத்தி பொருட்களை காட்சிப்படுத்தினர். மேலும், துறை சார்ந்த அரங்குகள் அமைக்கப்பட்டு அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இக்கண்காட்சியில் புதிய தொழில்முனைவோர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு ஆலோசனைகள் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.பி.வெங்கடேஸ்வரன்,கோவிந்தசாமி,சம்பத்குமார்,நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது,தருமபுரி தொழிற்சாலைகள் சங்க தலைவர் கே.தனசேகரன், தருமபுரி புளி உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் பாஸ்கர், தருமபுரி மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் பா.சுப்பையா, பாண்டியன்,கடகத்தூர் சிட்கோ செயலாளர் சரவணன்,நகர செயலாளர்கள் நாட்டான்.மாது,முல்லை ரவி,ஒன்றிய செயலாளர்கள் ஏ.எஸ்.சண்முகம்,பி.ஜெ. பச்சியப்பன், காவேரி,செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன்,ஐ.டி.விங் உதயசூரியன், ஜெ. ராஜேஷ்,மற்றும் அரசு அலுவலர்கள்,தன்னார்வலர்கள் மற்றும் சுய வேலை வாய்ப்பு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### பி.டி.பாண்டிச்செல்வம் தலைமை! கவிஞர் காசி முத்துமாணிக்கம் முன்னிலை! கழக வர்த்தகர் அணி சார்பில்

# இராயபுரத்தில் இளைஞர் எழுச்சி நாள்- வாழ்த்தரங்கம்-அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வாழ்த்துரை!

## அமைச்சர் கோவி.செழியன்–ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.–கலாநிதி வீராசாமி எம்.பி.– ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ.–ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, நவ, 24-

கழக வர்த்தகர் அணி சார்பில் இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு 26.11.2025-புதன்கிழமை அன்று காலை 10 மணிக்கு இராயபுரம் அறிவகம் திருமண மாளியைகில் மாபெரும் வாழ்த்தரங்கம் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி வர்த்தகர் அணி இணைச் செயலாளர் பி.டி.பாண்டிச் செல்வம் ஏற்பாட்டில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு கழக வர்த்தகர் அணி இணைச் செயலாளர் பி.டி.பாண்டிச்செல்வம் தலைமை வகிக்கிறார்.

வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்து முாணிக்கம், எஸ்.மோகன், ஐ.கென்னடி,வி.பி.மணி, கே.ஜி.பாஸ்கர் சுந்தரம்,இரா.செந்தில் குமார், வ.பெ.சுரேஷ், க. ஜெயராமன், அ.முருகன், இரா.லட்சுமணன்,எஸ். ஜெபதாஸ்பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

என்.சிவகுக்குமார், கூல் பிரகாஷ், லயன் தியாகராஜன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன், கோவி. செழியன், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் ஆகயோர் வாழ்த்துரை வழங்கி அறுசுவை உணவை வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில்ம டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி.-ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., ஜே.ஜே.எபினேசர், த.இளைய அருணா, டாக்டர் அ.சுபேர்கான்,இரா. மதிவாணன்,ந.மனோகரன், என்.மருதுகணேஷ், இரா.நரேந்திரன், இரா.கருணாநிதி, கவி.கணேசன், பழஞ்சூர் செல்வம்,மாலை ராஜா,வி. விஜயன், நா. முருகவேல், எஸ். முத்துச்செல்வி, என்.தாமரைபாரதி,எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், வி.எஸ்.ராமகிருஷ்ணன், பெ. சுந்தரவரதன், டி.ஆர்.முத்துச்சாமி,த.வனராஜ்,எம். எஸ்.அசோக்பாண்டியன், இ.ராமர்,க.தனசெல்வம்,வே.பல்லவிராஜா, பி. தர்மசெல்வன்,ஆ.சத்திய மூர்த்தி,கே.வி.எஸ்.சீனிவாசன்,பி.டி.அன்பரசன், ஆர். வெற்றிவீரன்,எஸ்.ஆர்.கமலக்கண்ணன்,மு.கோபி, க.நாகம்மை,வி.தயாளன்,வே.சிவக்குமார், இராயபுரம் சேகர்,நா.சண்முகம்,கி.ராஜேந்திரன்,பா. மதிவாணன்,ஏ.தமிழ்ச்செல்வன்,டி.கமல், அமுலு,வண்ணை புகாரி,த. தமிழ்க்கொடி, டி. வி.முத்துகிருஷ்ணன்,கு.நற்குணம்,ஏ.எஸ்.மகேந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஆர்.வி.கணேஷ்,கே. அசோக், எஸ்.மணிகண்டன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



தாம்பரம் மாநகர திமுக சார்பில் மாநகர கழக அணிகளின் நிர்வாகிகள் கூட்டம் மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் வசந்தகுமாரி, மாநகர துணை செயலாளர் இரா.நரேஷ்கண்ணா எம்.சி., சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பரிதிஇளம்சுருதி எம்.சி, மாநகர அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் தலைவர் கலைஞரின் மனசாட்சி முரசொலி மாறனின். 23 ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி. பூலாவரியில் அவருடைய திருவுருவப் படத்திற்கு. சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர்.இரா. இராஜேந்திரன். சேலம் கிழக்கு மாவட்ட கழக செயலாளர். எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி. ஆகியோர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

### ஒரு ஆசிரியரைக் கூட திராவிட மாடல் அரசு கை விடாது என உறுதியளித்த

# முதல்வருக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு நன்றி!

## நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிக்கை!



சென்னை, நவ.23-

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு நிறுவனத் தலைவர் சா.அருணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த செப்டம்பர் மாதம் உச்ச நீதிமன்றம் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு தகுதித் தேர்வு கட்டாயம் என தீர்ப்பு வழங்கி ஆசிரியர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது, 2010ஆம் ஆண்டு ஒன்றிய அரசு கட்டாய கல்வி உரிமை சட்டத்தை கொண்டு வந்து ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை மாணவர்களுக்கான இடைநிலை ஆசிரியர்கள் தகுதி தேர்வு தாள் ஒன்று எழுதி தேர்ச்சி அடைந்தால் மட்டுமே ஆசிரியர் பணிக்கு வர முடியும் என்றும் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கான பட்டதாரி ஆசிரியர்கள் தாள் இரண்டில் தேர்ச்சி அடைந்தால் மட்டுமே ஆசிரியர் பணிக்கு வர முடியும் என விதிமுறை வகுக்கப்பட்டு 2010 முதல் ஆசிரியர் பணி நியமனம் தகுதி தேர்வு முறையிலேயே நியமனம் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது தகுதி தேர்வில் தேர்ச்சியடைந்தாலும் போட்டி தேர்வில் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாயமும் உள்ளது.

**ஆசிரியர்களுக்கு ஆறுதல்!**

2010-ஆம் ஆண்டு முன்னர் பணியில் சேர்ந்தவர்களுக்கு தகுதி தேர்வில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டு இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இதனிடையே தகுதி தேர்வில் தேர்ச்சி அடைந்தவர்களுக்கு முன்றுரிமை அளிக்கப்பட்டு பதவி உயர்வு வழங்க வேண்டுமென வழக்கு தொடரப்பட்ட நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் உச்ச நீதிமன்றம் தீர்ப்பில் 2010 முன்னர் பணியில் சேர்ந்த ஆசிரியர்களும் கட்டாயம் தகுதி தேர்வு எழுத வேண்டும் எனவும் ஓய்வு பெற ஐந்து வருடமே உள்ள ஆசிரியர்களுக்கு தகுதி தேர்வில் இருந்து விலக்களித்தும் ஓய்வுபெற ஐந்து வருடத்திற்கு மேல் உள்ள ஆசிரியர்கள் தீர்ப்பு தேதியில் இருந்து இரண்டு வருடத்திற்குள் தகுதி தேர்வில் தேர்ச்சி அடைய வேண்டும் என்றும் அப்படி தேர்ச்சியடையவில்லை என்றால் பணியில் இருந்து விடுவிக்கப்படுவார்கள் என்ற அதிர்ச்சி தீர்ப்பை வழங்கியது.

தீர்ப்பு வந்த மறுநாளே தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி அனைத்து ஆசிரியர்கள் சங்க பிரதிநிதிகளை அழைத்து தங்கள் கருத்துக்களை கேட்டறிந்து திராவிட மாடல் அரசு பணியில் இருக்கும் ஒரு ஆசிரியரை கூட கை விடாது எனசூளுரைத்தார்.

அதோடு ஒட்டுமொத்த ஆசிரியர் சங்கங்களுக்கும் நானே தலைமையேற்பேன் என்றும் அறிவித்தும் உச்ச நீதிமன்றத்தில் மறு சீராய்வு மனு தாக்கல் செய்யப்படும் என்றும் சிறப்பு தகுதி தேர்வு நடத்தப்படும் என்று தெரிவித்து மன உளைச்சலில் இருந்த ஆசிரியர்களுக்கு ஆறுதல் அளித்தார்.

**சங்க நிர்வாகிகள் ஆலோசனை!**

மறு சீராய்வு தாக்கல் செய்யப்பட்டது. சட்ட போராட்டம் ஒரு பக்கம் இருந்தாலும் தீர்ப்பின் நிலை எவ்வாறு இருக்கும் தெரியாது. ஆதலால் சிறப்பு தகுதி தேர்வு குறித்து மீண்டும் இரண்டாவது முறையாக 21.11.2025 அன்று அனைத்து ஆசிரியர்கள் சங்கங்களின் நிர்வாகிகளை அழைத்து பணியில் இருக்கும் ஆசிரியர்களை பாதுக்காக்க எவ்வாறு மதிப்பெண் வழங்குவது. அதேபோன்று சட்டப்போராட்டத்தை எப்படி கையாளுவது குறித்த ஆலோசனைக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்து அனைத்து சங்க நிர்வாகிகளின் ஆலோசனை பெற்றார்.

அதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் சில ஆலோசனைகளை தெரிவித்தோம். அதாவது பணி மூப்பு மற்றும் ஆசிரியர் வகுப்பில் மேற்கொள்ளும் செய்முறை திறன் ஆகியவற்றிற்கு 60 விழுக்காடு மதிப்பெண்ணும் எழுத்து தேர்விற்கு 40 விழுக்காடு மதிப்பெண்களும் வழங்க வேண்டும், பட்டதாரி ஆசிரியர்களுக்கு எந்த பாடத்தை கை ஆளுகின்றாரோ அந்த பாடத்தில் இருந்தே 100 விழுக்காடு கேள்விகள் இடம்பெற செய்ய வேண்டும் இடைநிலை ஆசிரியர்களுக்கு ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு பாட திட்டத்தில் இருந்தே கேள்விகள் கேட்கப்பட வேண்டும் எனவும்

உடற்கல்வி ஓவியம் இசை உள்ளிட்ட சிறப்பாசிரியர்களுக்கு தகுதி தேர்வில் இருந்து விலக்களிக்க வேண்டும் என்றும் தேர்வு நடத்தும் பட்சத்தில் 80 விழுக்காடு செய்முறை திறன் தேர்வும் 20% விழுக்காடு எழுத்து தேர்வும் இருக்க வேண்டும் எனவும் மேலும் மாற்றுத் திறன் ஆசிரியர்களுக்கு தேர்வில் இருந்து விலக்களிக்க வேண்டும் செட் நெட், பி.ஹெச்.டி போன்ற உயர் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கும் விலக்களிக்க வேண்டும் டி.ஆர்.பி. மூலம் தேர்ச்சி அடைந்து பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களை ஆசிரியர் தகுதி தேர்விற்கு இணையான தேர்வாக அறிவித்து அவர்களுக்கும் விலக்களிக்க வேண்டும் உள்ளிட்ட ஆலோசனைகளை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் முன் வைத்தோம்.

இதுபோன்று அனைத்து சங்க நிர்வாகிகளும் பல யோசனைகளை தெரிவித்தனர். இந்த கூட்டம் மாலை ஐந்து மணிக்கு தொடங்கி இரவு 9 மணி வரை தொடர்ந்தது. கூட்டத்தின் முடிவில் அனைத்து சங்கங்களின் ஆலோசனைகளை நான்கு மணிநேரம் கேட்டறிந்த அமைச்சர் முனைவர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி அவர்கள் ஒவ்வொரு சங்க நிர்வாகிகள் தெரிவித்த கருத்துக்களை குறிப்பிட்டு மற்ற மாநிலங்களில் எவ்வாறு கை ஆளுகின்றனர் என்பதை எல்லாம் ஆராயந்து முடிவெடுப்போம் என்று தெளிவுரை நிகழ்த்தினார்.

**முதல்வரை நேரில் சந்தித்து விளக்கம்!**

மேலும் இன்று நடக்கின்ற ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட முக்கியத்துவத்தை மூத்த வழக்கறிஞர் மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் அவர்களிடம் அலைபேசி வாயிலாக விவாதித்தார். இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதை திராவிட மாடல் நாயகன் தமிழ் நாட்டை முன்னோடி மாநிலமாக நடத்தும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நாளை காலையிலேயே மூத்த வழக்கறிஞர் வில்சன் அவர்களை அழைத்து சென்று விளக்கி அடுத்தகட்ட நகர்விற்கு எடுத்து செல்வேன் என தெரிவித்த மாத்திரத்தில் இன்று காலை இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து விளக்கினார்.

முதலமைச்சர் முழுவதுமாக கேட்டறிந்து ஒரு ஆசிரியரை கூட கை விடாது என் தலைமையிலான திராவிடமாடல் அரசு என உறுதி அளித்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மறு உருவம் என்பதை பறைசாற்றி உள்ளார். அதோடு டிசம்பர் மாதமே அனைத்து ஆசிரியர் சங்க பிரதிநிதிகளையும் டெல்லிக்கு அழைத்து சென்று ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்து முறையிடவும் பாராளுமன்றத்தில் தமிழ்நாடு எம்.பி.கள் குரல் எழுப்பவும் ஏற்பாடு செய்வதாக உறுதி அளித்து ஆசிரியர் அரசு ஊழியர்களின் காவலர் என்பதை நிரூபித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி அவர்களுக்கும் பள்ளிக்கல்வித்துறை முதன்மை செயலாளர் சந்திரமோகன், பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன், தொடக்க கல்வித்துறை இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ் ஆகியோருக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர், தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தர்மபுரி நகரம் குமாரசாமிபேட்டை கிருபானந்த வாரியார் பள்ளி பூத் எண்.125,126,127 பகுதிகளில் நடைபெற்ற எஸ்.ஐ.ஆர். சிறப்பு முகாமினை தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் – தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ. மணி நேரில் பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார்.இந்த நிகழ்வில் தர்மபுரி வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி,தர்மபுரி கிழக்கு நகர பொறுப்பாளர் நாட்டான் மாது, மாவட்ட துணைச் செயலாளர் ரேணுகா தேவி,தலைமை கழக பேச்சாளர் டி.ஏ.ரவி,மற்றும் நிர்வாகிகள்,BLA2,BDA,BLO க்கள் கலந்து கொண்டனர்.